In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No. 78/2023

Prosecution witness P.W.6

Name: Palanichamy

Calling:

Father Name:

Religion:

Village:

Caste:

Taluk:

Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02.03.2026.

**(Accused 1 and 2 present.)**

முதல் விசாரணை :–

நான் தற்சமயம் கன்னிவாடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.06.2022ம் தேதி நான் ஆயுதப்படை மோட்டார் வாகன பிரிவில் எஸ்எஸ்ஐயாக பணியாற்றி வந்தேன். அன்று ஊர்க்காவல் படையினரை ஈச்சர் வாகனம் TN–57–G–0697 வாகனத்தில் ஏற்றிக்கொண்டு நான் ஓட்டிச்சென்றேன். விருவீடு காவல்நிலையம் சென்று ரிப்போர்ட் செய்துவிட்டு நடகோட்டை கிராமத்திற்கு சென்றோம். ஆரம்பத்தில் 20 நபர்களை ஏற்றிக்கொண்டு சென்று ஆங்காங்கு பாயிண்டுகளில் இறக்கிவிட்டது போக 4 ஊர்க்காவல் படையினர் வண்டியில் வந்தார்கள். நடகோட்டையிலிருந்து விருவீடு போகும்போது வத்தல்பட்டி என்ற கிராமத்தின் பேருந்து நிறுத்தம் வழியாக சென்று கொண்டிருந்தேன். அப்போது சீமான் வருவதை முன்னிட்டு கூட்டமாக இருந்தது. நான் மெதுவாக வண்டியை ஓட்டிச்சென்றேன். ஈச்சர் வண்டிக்கு பின்னால் டம் என கல் எறியும் சத்தம் கேட்டது. கொஞ்சதூரம் தள்ளி வண்டியை நிறுத்தினேன். நிறுத்திபார்த்தபோது கல் எறிந்ததில் ஈச்சர் வண்டியின் பின்பக்க கண்ணாடி உடைந்தது. ஊர்க்காவர்படையினர் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது. எல்லோரும் வண்டியை விட்டு இறங்கிய பிறகு விசாரித்தோம். இறங்கிய பிறகு ஊர்க்காவல் படையைச்சேர்ந்த ராஜலட்சுமி

என்பவருக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. 4,5 பேர் கல் எறிந்தார்கள். அதில் இரண்டு நபர்களின் பெயர் மட்டும் சொன்னார்கள். 1. காமாட்சி அவரது மகன் 2. சிவபாண்டி என பக்கத்தில் இருந்த ஊர்க்காரர்கள் சொன்னார்கள். அதன் பிறகு ராஜலட்சுமி மற்றும் ஊர்க்காவல்படையைச் சேர்ந்தவர்கள் அவ்வழியாக வந்த அரசு பேருந்தில் ஏறி விருவீடு காவல் நிலையம் சென்றுவிட்டார்கள். விருவீடு காவல் நிலைய எஸ்.ஐ அங்கு வந்தார்கள். என்னை அவர் காவல் நிலையம் அழைத்துச் சென்றார். ஈச்சர் வண்டியை விவேக் என்ற போலீஸ்காரரை வைத்து காவல் நிலையம் எடுத்துச்சென்றார்கள். இருசக்கர வாகனத்தை மோதியதால் கல்லைக்கொண்டு எறிந்ததாகச்சொன்னார்கள். ஆனால் நான் மோதவில்லை. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

ஆய்வாளரது விசாரணையில் வத்தலப்பட்டி பஸ்ஸ்டாப்பில் இருசக்கர வாகனத்தில் எதிர்பாராத விதமாக மோதிவிட்டேன் என சொல்லியுள்ளேன் என்றால் நான் சொல்லவில்லை. நான் போலீசார் விசாரணையில் எதிர்பாரா முகமாக மோதிவிட்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றும் அது உண்மைதான் என்றும் சொன்னால் சரியல்ல. நான் மோதியவுடன் ஓடைக்குள் இருசக்கர வாகனமும், 2 வது எதிரியும் அவரது சகோதரரும் விழுந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. ஈச்சர் வண்டி அங்கு நின்றபின்னர் எவ்வளவு நேரம் அங்கு இருந்திருப்பேன் என்றால் 5 நிமிடம்தான் அங்கு இருந்தோம். அந்த 5 நிமிடத்திற்குள் எஸ்.ஐ.கலையசரன் அந்த இடத்திற்கு வந்து என்னை விருவீடு காவல்நிலையம் அழைத்துச்சென்றார். மேற்படி எஸ்.ஐ.க்கு யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் எனக்குத் தெரியாது. நாங்கள் அங்கிருந்தபோது ஆம்புலன்ஸ் வந்து 2 வது எதிரியையும் அவரது சகோதரரையும் ஏற்றிச்சென்றது என்றால் நாங்கள் இருக்கும்போது வரவில்லை. பின்னர் வந்ததாக கேள்விப்பட்டேனா என்றால் இல்லை. எஸ்.ஐ.கலையரசன் வந்து என்ன

விசாரணை செய்தார் என்றால் பிரச்சனையாகி கூட்டம் அதிகமாக இருந்ததால் உடனே என்னை காவல்நிலையம் அழைத்துச்சென்றார். என்ன பிரச்சனை என்றால் இருசக்கர வாகனத்தை தட்டிவிட்டதாகச்சொல்லி பிரச்சனை செய்தார்கள். 25-30 பேர்கள் அங்கு கூட்டம் கூடினார்கள். எஸ்.ஐ. இருசக்கர வாகனத்தில் வந்திருந்தார். அதில் என்னை ஏற்றி காவல்நிலையம் கூட்டிச் சென்றார். சம்பவ இடத்திற்கும் விருவீடு காவல்நிலையத்திற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 4 கி.மீ. தூரமிருக்கும். என்னை மட்டும் என்ன காரணத்திற்காக அவர் அழைத்துச்சென்றார் என்றால் நான் ஈச்சர் வண்டியை ஓட்டிவந்ததால் பிரச்சனையாகிவிடும் என்று அவர் என்னை மட்டும் அழைத்துச் சென்றார். காவல் நிலையம் சென்ற பின்னர் அங்கிருந்து என்னை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். எதற்காக அழைத்துச்சென்றார்கள் என்றால் எனக்கு அடிபட்டதால் அழைத்துச்சென்றார்கள். உங்களுக்கு எப்போது அடிபட்டது என்றால் ஈச்சர் வண்டியைவிட்டு இறங்கி ரோட்டில் கீழே நிற்கும்போது 2 வது எதிரி கல்லைக்கொண்டு எறிந்ததில் எனக்கு முதுகில் காயம் ஏற்பட்டது. அந்த காயத்திற்கு சிகிச்சை அளித்ததற்கான ஆவணத்தை அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் இல்லை. நான் சிகிச்சை பெற்றுவிட்டு வீட்டிற்குச் சென்றுவிட்டேன். அன்றைய தினம் வத்தலக்குண்டு காவல் நிலையத்திற்கு போலீசார் என்னை அனுப்பிவைத்து என்னை பரிசோதித்த மருத்துவர் நான் குடிபோதையில் இருந்ததாக விபத்து பதிவேட்டினை கொடுத்துள்ளார் என்றும் அந்த விபத்து பதிவேடுதான் என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் என்றும் சொன்னால் நான் அடிபட்டதற்காகத்தான் மருத்துவமனை சென்றேன். நான் குடிபோதையில் ஈச்சர் வண்டியை ஓட்டி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றும், அது சம்மந்தமாகத்தான் அரசு மருத்துவர் எமசாஆ.1 ஐ வழங்கியுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல. என் மீது விபத்து சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்குத்

தெரியும். அந்த வழக்கு கு.எண்.136/2022 u/s 279, 337 IPC வழக்கில் நிலக்கோட்டை ஜே.எம். கோர்ட்டில் ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கு எண்.எஸ்.டி.சி.எண். எனக்கு ஞாபகமில்லை. எஸ்டிசி.எண்.21/2023 வழக்கில் ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான். அந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் TN–57–BX–8363 Honda Shine வாகனத்தில் இருந்த 2 வது எதிரி மற்றும் அவரது சகோதரர் பிரகாஷ் ஆகிய இருவரும் நான் மோதியதில் ஓடைக்குள் தூக்கிஎறியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கின் புகாரில் இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. என் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கை எமசாஆ.2. மேற்படி இருவரும் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற விவரம் எனக்கு தெரியாது. எஸ்.ஐ.கலையரசனிடம் எனக்கு எதிராக எதிரி சிவபாண்டி புகார் கொடுத்தார். ஒரு வாரம் கழித்து தெரிந்துகொண்டேன். நான் குடிபோதையில் வாகனத்தை ஓட்டிவந்து 2 வது எதிரி மற்றும் அவர் சகோதரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றும் என்னை காப்பாற்றுவதற்காக ஊர்க்காவல்படையைச்சேர்ந்த ராஜலட்சுமி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் குடிபோதையில் இருந்தேன் என்றும் என்னை காப்பாற்றுவதற்காக போலீசார் அனைவரும் சேர்ந்து ராஜலட்சுமி மூலமாக பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.02 16:59:02 +0530

Principal District Judge,
Dindigul.